



ஓலை 62 | ஓசை 182 | மார்ச் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு, உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பை உண்டாக்கும். அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அலையென அன்பை அளி

## பா வகை: மருட்பா

அலையெனவே அன்பை அளித்திட வேண்டும்
கலையாய் பரிவினை கட்டமைக்க வேண்டும்
அறத்தினில் அன்பே அகன்றதாம் என்றும்
குறைகள் மறந்தே குவித்திடும் நேயம்
கடவுளாய் மாற்றிடும் கண்ணீர் துடைக்க
படைகளாய் நின்றே படும்*நோ - உடைக்கும்
அன்பே என்றும் ஆறுதல் கொடுக்கும்
மின்னல் விரைவாய் மீட்கும் மனத்தை
அன்பே உயர்நிலை அருளும் வள்ளுவம்
அன்பே மந்திரம் அகத்தை வென்றிட
பிரதி பலனே பேணிடா
இருக்கும் அன்பே இறையின் வீடே

*நோ- துன்பம்



கவிஞர் பூர்ணிமா சங்கர் கோயம்பத்தூர்

# பழமொன்ரியுக்கள்

சினிமாச் சுவர்
சித்திரம் ஓஹோ
சிரிப்பு தியானம்

நமக்கு ஆகாததது
நஞ்சோடு பாவம் ஒக்குகின்றன
கூவத்தூர் கூத்துகள்

சூடு கண்ட பூனைகள்
அடுப்பங் கரையில் மீண்டும் மீண்டும்
விவசாயிகள் போராட்டம்

ஆறுகெட மணற்கொள்ளை
ஊரு கெட ஊறுபட்ட குப்பை
மாக்கள்

ஒலிக்கா பொற்கலங்கள்
டபாய்க்கும் வெண்கலங்கள்
தேர்தல் அலப்பறைகள்



கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி
பிச்சாண்டார் கோவில்

# அம்மா

அப்பாவுக்கு
மிகவும் பிடித்தமென்று
வத்தக்குழம்பு
வைத்திருக்கிறாள்
அம்மா.

மழைநாளில்
மாலை பில்டர்காபியோடு
தாத்தாவுக்கு
வெங்காயபஜ்ஜி பிரியமென்று
செய்து தருகிறாள்
அம்மா.

அக்காவுக்குப்
பிடிக்குமென்று நேற்று
கத்தரிக்காய் கூட்டும்
பருப்புத்துவையலும்
செய்து கொடுத்தாள்
அம்மா.

தம்பிக்கு
தயிர்வடை விருப்பமென்று
அடிக்கடி செய்துதருகிறாள்
அம்மா.



எனக்கு
மிகவும் பிடித்தமென்று
வாரத்தில் மூன்று நாள்
மத்திய சாப்பாட்டுக்கு
புளியோதரை தருகிறாள்
அம்மா.

நான்காவது வீட்டு
பார்வதியக்கா மகன்
ஜீவாவுக்கு
வீட்டில் எது செய்தாலும்
மறக்காமல் கொடுத்திடுவா
அம்மா.

அம்மாவுக்குப் பிடிச்சத
இதுநாள்வரை
செய்ததேயில்லை.
நாங்க கேட்டாலும்
அம்மா
சொன்னதேயில்லை.

அம்மாவுக்குப்
பிடிச்சதெல்லாம்
எங்க எல்லோருடைய
மகிழ்ச்சி மட்டுமே!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன் குடியாத்தம்

விழித்து எழுந்ததும்
பூக்களைப் பறித்து விடுவார்கள் என
இலைகளுக்குத் தெரிவதில்லை

*

அதி விரைவுப் பேருந்து,
அணு உலை சோதனை,
கண்டம் விட்டு கண்டம் பாயும்
ரயில்கள்,
7 ஜி தொலை தொடர்பு சேவைகள்,
வயலே இல்லாமல் நெல்லை
அறுவடைச் செய்யும் வளச்சி,
வானுயர்ந்தக் கட்டிடங்கள்,
எட்டு வழிச் சாலைகள்,
அடித்து நொறுக்கும்
தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள்,
கிழக்கு, மேற்கை இணைக்கும்
நாகரீகங்கள் என
உள்ளங்கையில் உலகம் வந்தாலும்
அந்த தினமும் உதிக்கும் சூரியனுக்கோ
இன்னும் ஒரு குழந்தையாய்
பூமி !



*

வண்ணத்துப்பூச்சிக் கொடுத்த முத்தத்தை
நினைத்து வாடிக் கொண்டிருக்கும்,
பூக்கள் !

கவிஞர் இரா.மதிராஜ் காங்கேயம்

# வெல்வதற்குப் போராடு



வாழ்க்கைப் பயணத்தில்
வாழ்வாங்குப் பயணித்திட

விடியலில் எழுந்தே
விரைவாய்ப் பணியாற்று.

தன்னம்பிக்கை கொண்டே
தளராது முயன்றிடு.

உன் ஆற்றலை
உவந்து அறிந்திடு.

சோம்பித் திரியாது
சோதனையில் துவளாது

நேர்மறை எண்ணத்தோடு
நாளும் உழைத்திடு.

எளிமையாய் வாழ்ந்திட
ஏற்றம் பெற்றிட

என்றும் போராட்டம்
எங்கும் போராட்டம்

கற்றக் கல்வியைக்
களிப்போடு துணையாக்கு.

பலரும் சென்ற
பாதை வேண்டாமே!

உனக்கெனப் பாதை
உழைத்தே உருவாக்கு.

தூற்றுவோரை ஒதுக்கிடு!
போற்றிடச் செயலாற்று.

யாவரும் வாழலாம்
யாண்டும் வாழலாம்.

குறிக்கோளை நோக்கியே
குதூகலமாய்ப் போராடு

இடையில் சோராதே.
இடரைப் படியாக்கு.

மிதித்தே ஏறிடு
மிதிக்கலாம் சிகரத்தை.

உறுதியாய்ப் போராட
உச்சத்தில் நிலைக்கலாம்.

கவிஞர் செ.கலைவாணி
மெல்போர்ன்

புண்ஆறலாம்
மருந்திடக் கட்டி!
புரையோடின புண்
ஆறுமோ புற்றுக்கட்டி?

கட்டி வைத்த நினைவு,
போர்த்தி வைத்த வார்த்தை
நீர் பூத்த நெருப்பு

நெய்யிடை மெய்
மெய் என்னும் பொய்
பொசுங்கி எரியும்
மெய்யாய் இருந்த
மனமும்
அன்று பொங்கி எரியும்



கவிஞர் சசிகலா வில்வநாதன்

# தமிழ் உயிர்க்கட்டும்

என் ஜீவனில் தமிழ் உயிர்க்க வேண்டும்
என் இறுதி மூச்சிலும் தமிழ் மணம் கமழ வேண்டும்.

வேற்று மொழியைக் கற்றுத் தேர்ந்தாலும்
என் இதயத்தில் தமிழே நிலைக்க வேண்டும்.

ஞாலத்திற்கே அழிவு வந்தாலும்
எம் தமிழ் அழிவின்றி வாழ வேண்டும்.



மரணம் என்னை நெருங்கினாலும்
மரண ஓலங்கள் தமிழில் ஒலிக்க வேண்டும்.

மறுஜென்மம் ஒன்று இருந்தாலும்
தமிழுக்குச் சேவை செய்தே முக்தி பெற வேண்டும்.

தமிழ் மொழியை அழித்து மகிழ கயவர்கள் வந்தாலும்
தமிழ் பற்றோடு அவர்களை அடித்து ஒழிக்க வேண்டும்.

கவிஞர் ரோஹிணி ராஜாமணி
மலேசியா

# உயிரினில் கலந்திட

உயிருக்கு உயிராய் நேசித்த காதல்
இயற்கையோடு பூ வாசம் மலர
அவளும் நானும் நடந்து வர
உள்ளம் இன்பத்தில் திகைத்து நின்றது

அழகான காலையும் அன்போடு மலர
நம் நேசமும் நித்தமும் நினைவுகளாய்
என்னுள் அனுதினமும் வந்து செல்கிறது
எத்தனை எத்தனை இன்பங்கள் நம்முள்



எண்ணும் போது காவியம் காணாத
கதைகளும் சொல்லாத
அன்பின் சுவையில்
நானும் சுவைத்து வியந்து நின்றேன்
வாழ்வில் சுவாசமாய் நான் இருக்கிறேன்

நாளும் உன்னையே நினைத்து வாழ்கிறேன்
இன்ப துன்பம் எல்லாத்தையும் தாண்டி
இதயத்துள் இரண்டற கலந்து நின்றாய்
நம்மை யாராலும் பிரிக்க முடியாது

மௌனத்தின் மொழியில் அழைக்க
நிலையில்லாத உலகில் வாழ்வதை நினைத்து
என்னுள் ஆயிரம் எண்ணம் தோன்றிட
உன்னை வெல்ல யாராலும் முடியாதே

அன்பின் வலியது வெல்ல தாண்டினேன்
என் இதயத்தை திறந்துப் பார்த்தேன்
மனதில் சேமிப்பாய் நீயிருக்க நான்
உன்னையே சிந்திக்க தொடங்கினேன்

உனது நேசம் எனக்கு பெரிது
எனது சுவாசமே நீ தான்
நிதர்சனத்தை எல்லாம் உன்னுள் மொழிந்து
உயிரில் கலந்த உயிராய் நிற்கிறேன்

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்
நாகர்கோவில்

# அன்றும் இன்றும் பெண்

வரைபாயும் அருவி குழலாக அவள்
வளர்பிறை இரண்டு இடையாக
இருந்த காலம் அன்று
அது இறந்த காலம் இன்று.

கற்பியல் கலவியல் பழகி
பள்ளியில் கணவனுடன் உலவி
பல மழலைகள் பெற்ற காலம் ஒன்று
உண்டு இல்லை அது இன்று.

வேந்தியல் பொதுவியல் நடனம்
பல வேந்தர்கள் வேடிக்கை நிகழும்
அதை உரைத்திட வார்த்தைகள் நாணும்
அதைகூறவில்லை நானும்.

அடுப்பினில் வெந்து அடிமையாய் நொந்து
மழலைகள் பெற்று மலடியான காலம் ஒன்று
அது இறந்தது இன்று.

இறந்த கணவனைக் கண்டு
உயிரினை உடனே துறந்து
இன்னுயிரை ஈர்ந்து வரைபாய வேண்டும் அன்று
உடன் கட்டையான கதையும் உண்டு.

வளை தொடி இழைகளை துறந்து
துறவியாகவே நிகர்ந்து
கூந்தல் மலித்து மெத்தை தவிர்த்து
பத்தினியாகி பட்டினியாகி.

ஆயிழை அவளும் வாழ்ந்து போனால் அன்று
அது இல்லை என்முன் என்று
மனம் மகிழுது மழையில் நின்று.

பண்பினை பணிவுடன் பயின்று
பல அன்பினை அழகாய் பகிர்ந்து
அரவனைக்கும் ஆயிழை அவளை கண்டு
கைவணங்குது தானே எழுந்து.



நாட்டிற்கு வழங்குவாள் நீதி
நாடிவருவோர்க்கு வழங்குவாள் மருந்து
அறிவுக்குத் தருவாள் விருந்து.

அவளைத் தேடிப் பொருந்து
இறைவன் கொடுத்த வரமே
வாழ்க்கை அமையும் சுகமே.

வெள்ளரித் தேகம் வெட்டிவச்சா
தாகம் வீதியிலே திரிவதும் பாதியிலே
அலைவதுவும் அம்மனமாகவே.

குதியுயர்ந்த பாதம் கைக்குட்டையாடை
மீதம் பார்ப்பவரை பள்ளிக்கழைக்கும்
பத்தவச்ச தேகம் வருவதோ மோகம்.

மனம் நெருங்கிய கணவனை அடைந்து
அதில் ஆயிரம் பிரச்சனை நுகர்ந்து
பின் அடுத்தவன் கணவனை
கொள்ளை பூணுவாருண்டு.

இப்படியும் சில பெண்டிர் இருக்கிறார் இன்று.

கவிஞர் கோ.தனுசன் மட்டக்களப்பு(இலங்கை)

# நல்ல வார்த்தை சொல்லுமா மீனாட்சி

கம்பி கதவுகள் இல்லை
குஷன் வைத்த கரங்கள் இருக்கின்றன
நெல், வாழைப்பழங்களுக்கு பதில்
சார்ஜர் பேட்டரி இருக்கிறது
கால் கட்டை விரலை ஆட்ட வேண்டாம்
எலக்ட்ரானிக் போர்டு பார்த்துக் கொள்ளும்
ராமன், முருகன், சிவன், வெங்கடாசலபதி
படங்களைக் கண்டதும் வரும் சிலிர்ப்பு
பின்னணி இசை கலந்த
காந்தக் குரலைக் கேட்கையிலும் வருகிறது
கிளியின் பச்சை நிறத்திற்கு இணையாக
மின்னுகிறது சீரியல் வெளிச்சம்
'நல்ல வார்த்தை சொல்லும்மா மீனாட்சி'
கிளியிடம் சொன்னதையே
கூலிங் கிளாஸ் அணிந்து
ஜிகினா பாவாடை தரித்த
பொம்மையிடமும் சொல்கிறார்.
காலத்தோடு மாற்றங்கள் நிகழ்ந்திருந்த போதும்
என்றும் மாறாமல் இருப்பது.
எதிர்காலம் குறித்த கவலையோடு வரும்
ராமசாமி, கோவிந்சாமி, வள்ளியம்மாக்களும்.
மீனாட்சி என்ற பெயர் சூட்டலும்!



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# கொலுசொலி

எங்கிருந்தோ வந்தென்னை ஆட்கொண்டாய்
எப்போதும் உடனிருப்பதாய் உறுதியளித்தாய்
தளர்ந்திட்ட போதெல்லாம் தழுவிக்கொண்டாய்
மலர்ந்திட்ட நேரத்தில் முறுவலித்தாய்
காலச்சுழற்சியில் காணமல் போனாய்
உன்னோடிருந்த தருணங்களை மனதிற்குள்
வாதைக்கொண்டு வருந்தியே தேடுகிறேன்
ஆழ்மனதின் பேரன்புக்குள் ரீங்கரிக்கிறாய்
எனைப் பிணைத்திருக்கும் கொலுசொலியாய்!



கவிஞர் சாந்தாதேவி
சென்னை

# என் காதல் உன்னோடுதான்

நினைவுகளில் அழியவில்லை
நின்னையும் மறக்கவில்லை

கடலலையாய் ஆர்பரிக்கும்
உந்தனது எண்ணங்களே

ஞாபகங்களில் மறையவில்லை
துளிர்க்கிறது நாளுமே

அன்பை அளவிடும்
விஞ்ஞானமும் இல்லையே

சிந்தை யாவிலும்
நிறைந்திருப்பது நீதானே

இதயத்தில் சித்திரமாய்
பதிந்து விட்டாயே

குளிரும் தென்றலாய்
மேனியைத் தழுவுகிறாயே

எழிலான நங்கையே
எனக்குள் கங்கையானாயே

வண்ணச் சிறகடித்து
வானில் பறந்திடுவோமே



மேகத்தில் மிதந்தே
வான்நிலவை இரசித்திருப்போமே

இளமையின் நாயகியே
இனிமைதனை சுகித்திருப்போமே

குறுநகை புரியும்
குணவதியே இணைந்திடுவாயே

கலையாத கனவினில்
நிலையான அன்பே

அமுதூறும் செவ்விதழால்
கன்னத்தை ஈரமாக்கிடுவாயே

சிலிர்த்திடும் நெஞ்சமும்
அரவணைத்தால் மகிழ்ந்திடுமே

யுகங்கள்யாவும் என் காதல்
உன்னோடுதானே.

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன் விருதுநகர்

# பண்டைய நாடு

பொருளீட்டும் திறன் தெளிந்து
நல்லவை நல்கி அல்லவை நீக்கி
வளமை சேர்க்கும் வேந்து!

செறுநர் செருக்கறுக்கும் படை
பசிப்பிணி யில்லாமக்கள் வாழ்வு
மதிநிறைந்த சான்றோர் அவை

களவு மறந்த கள்வர்கள்
முல்லைக்கொடி தழுவும் அரண்
இல்லாமை இல்லா நிலை
குறைவில்லா செல்வம்
குன்றாவளம் நிறைந்த நாடு



கவிஞர் செ.தமிழ்நேயன்
தமிழ் நாடு

# குருவில்லா வித்தை

இன்பமும் துன்பமும்
இணைந்ததே இவ்வுலகமும்
இவ்வாழ்க்கையும் என்பதை
ஓர் உயிரியிடமிருந்தே
கற்றுக் கொள்கிறேன்.
குருவில்லாமலே
வெகு கச்சிதமாக!
***

ஓ! அது
மயிர்க்கொட்டியாக
மரங்களிலும்,
மரஞ்செடி கொடி
இலைகளிலும்
இருக்கையிலும்
எனதும் எல்லோரதும்
மேனியிலும் படுகையிலும்.
***



பின்னர், அது தன்
மயிர்களைக்கொட்டி
மறுவாழ்க்கை நாடி.
"மயிர்க்கொட்டி" என்னும்
அருவருப்பு நிலையிலிருந்து
உருமாறி.
***

வண்ணத்துப் பூச்சியாய்
எண்ணத்தைத் தூண்டும் வண்ணம்.
எழுந்து பறக்கையிலும்.
எனதும் எல்லோரதும்
எழுத்துகளுக்கு(ம்) சிறகுகள்
தைத்துத் தருகையிலும்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன்
இலங்கை

# நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது இறந்தகாலம்

ஒரு தென்றலும்
அவளின் துப்பட்டாவும்
எப்போதும் எனை தீண்ட மறுத்ததில்லை
வாசனைகளை நுகர்ந்து
மார்போடு அணைத்துவிடுகிறது
தென்றலை முந்திவரும் அவள் வாசம்



நேற்று
கரடுமுரடான சாலையில்
மெல்ல மிதந்தோடிய நதியாய்
அவளின் வருகை
இன்று மெடுக்கேறி
கானலை நிரப்பிய சாலையில்
விரக்தியில் வழிகிறது
தடுக்கியும் தடுக்காமல்
நான் பார்க்க நின்றிடும்
மெடுக்கான நீண்ட சாலை.

வழியெங்கும் மலர்ந்த பூக்களுக்கு
விரல் தீண்டலை பரிசாக்கி நகர்கிறாள்
அவளை மறந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது
இறந்த கால நினைவுகள்

கவிஞர் சே கார்கவி கார்த்திக்
நாகப்பட்டினம்

# நதியோர நாணல்களே

நதியோர நாணல்கள்
நீரோட்டத்தில் தலைகுனிய
விதியை நினைத்திடாமல்
மதியால் வென்றிடவே.

பாடம் சொல்லும்
பாவலனாய் நிற்கின்றன.
வளைந்து கொடுத்தே
நாணம் கொண்டிட.



எதிரியை எப்போதும்
எடைபோட்டு நின்றே
எதிர்ப்படுத்தும் பாடம்
எழுதித் தருகிறதே.

நீர்க்குமிழியான வாழ்வில்
நிறங்கள் காட்டும்
நித்தில வண்ணங்களை
நிலைப்படுத்தும் உதாரணமே.

காற்றினிலும் மழையினிலும்
காததூரப் புயலிலும்
காத்துக் கொள்ளும்
கரையோரக் காவலாளிகளே.

கவிஞர் இரஜகை நிலவன் மும்பை

# பயணத்தின் காதலன்

அவன் தான் பயணத்தின் காதலன்
சிறகு விரிக்கும் பட்டாம் பூச்சியாய்
சுதந்திரமாக சுழன்று திரியும்
பயணத்தின் காதலன் அவன்

கவலை மறக்க தனிமையை தொலைக்க
இயற்கையை தேடும்
இயற்கையின் ரசிகன் அவன்

குழப்பங்களும் திருப்பங்களும் வரும்போது
ஆகாய காற்றை சுவாசிக்கும்
செந்தாமரை மலரவன்.

போகும் பாதையே பிறப்பிடம் என்பான்
நின்மதியாய் உறங்குமிடமே வசிப்பிடம் என்பான்.

மாதத்தில் இருமுறை அவன் இயற்கை அணைத்தப்
புகைப்படங்கள் இணையத்தில் தவழும்
இனிப்பான நினைவுகள் அவன் கதையோடு
சுவாசத்தில் சுவாசிக்கும்



கட்டளையிட யாருமில்லை
அவன் கவரிமான் பிள்ளை என்பது பொய்யுமில்லை.

சொத்து சொத்தாய் பணம் சேர்த்தும்
பலருக்கும் சொல்லிவிட கதையில்லை
அவன் சென்று வந்த கதை சொல்ல
நேரங்கள் போதவில்லை.

பயணத்தின் காதலன் அவனை காதலித்ததால்
பாதம் பட்ட இடமெல்லாம் பசுமையின் தீவுதான்.

கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா
மூதூர்

# எறும்பு

ஆறு கால் கொண்டு நடக்கும்
அறிவு செறிந்த அற்புதம் நீ!

ஆயிரம் வகைகள் உண்டு உன்னில்
ஆண்டவனும் படியளந்தான் மண்ணில்!

மாரிக்கால உணவிற்கும் மறக்காமல்
ஊண் சேர்த்து வைக்கும் உழைப்பாளி!

எளியவனும் வலியவன் ஆவான்- நீ
ஏற்றி சுமக்கும் சுமை பார்க்கையிலே!

மன உறுதிக்கு மாண்பாய் இருப்பவன்
எறும்பு ஊர கல்லும் தேயும் சொல்லுண்டு!

குழு சேர்த்து பணி பார்க்கும் பக்குவம்
கொடுத்தாய் கொடையாய் இங்கே!

சுருண்டு விழும் மானிடெற்கெல்லாம்
சுறுசுறுப்பை சொல்லி தந்தாய்!

உண்ணும் உணவின் சேமிப்புதனை
உலகுக்கு உரைக்க வைத்தாய்!

எந்த அகழ்வாராய்ச்சி ஆராயும்
உன்தன் கூட்டின் தரவரிசையை!

துரும்பாய் இருந்த மனம்தனை
இரும்பாய் இருக செய்த எந்திரனே!

பத்து வாரம் பவனிவரும் வாழ்நாளில்
பாரில் புரியவைத்தாய் வாழ்க்கைதனை!



கவிஞர் ஆனந்த் குவை.ஜெயராமன் சேத்தியாத்தோப்பு

# என் தேடல்

இரைச்சலுடன் வாழ்ந்த எனக்கு, தனிமை
இனிமையாக இல்லை
என்னுடன் என்னால் இருக்க முடிவில்லை
இயல்பாக இயங்க முடியவில்லை
என்னுடன் என்னால் இயக்க முடியவில்லை எனில்
எதற்காக படைக்கப்பட்டேன்?
என்ன நோக்கத்திற்க்கு உருவாக்கப்பட்டேன்.
தேடினேன் தேடினேன்

தேடல் என்ற மூன்றெழுத்து,
விளக்கம் என்ற நான்கெழுத்தை
அறிமுகப்படுத்தியது, பின்
உற்சாகம் என்ற ஐந்தெழுத்துடன்
கைகோர்த்து கொண்டுவிட்டது.



இந்த நிமிடம் எனக்காக வாழ்வது,
அல்லது பிறன் நலக்காக வாழ்வது
என்ற தீர்மானத்துடன் துவங்கினேன்.
ஆம் இப்போது நொடி நொடியாக
வாழப்பழகிக்கொண்டேன்.
அது ஒன்றும் அவ்வளவு எளிதல்ல.
பலமுயற்சிக்குப்பின் பக்குவமாய்
தெரிந்து கொண்டதை பலமுறை முயற்சித்தேன்.
ஊக்கமளித்தது
ஊட்டமும் அளித்தது.
"உன்னுள் தேடு" என்ற தாரக
மந்திரத்தை தந்த இறைவனுக்கே
என் நன்றி அனைத்தும்!

கவிஞர் பானு அப்துல்லா

1. விழா அறை காதை .

1. இந்திர விழா வரலாறு :

புகார் நகர மக்கள் ஒழுக்கங்களிலிருந்து மாறுபடாதவர்கள்
தகாத செயல்கள் செய்யாதவர்கள், நீதி நெறி வழுவாதவர்கள்
மகா தவசிகள் சேர்ந்து வாழும் சிறப்புடைய நகரம் பூம்புகார்
சகாயமாக வாழும் சாமானியர்களும் நேர்மைத் தவறாதவர்கள்

பொதிய மலையில் வாழும் அகத்திய முனிவர் ஒன்று கூறினார்
''மதில்கள் சூழ்ந்த ஆதிக்க நாயகன் தொடித்தோள் செம்பியனே
பதில் ஏதும் கூறாமல் இந்திரலோகம் சென்று இந்திரனை சந்திப்பாய்
அதில் அவன் பெயரில் நடக்கும் இந்திரவிழாவை சிறப்பிக்கக் கூறு,''



2. விழாவில் பங்குபெறும் சான்றோர்:

ஆண்டுதோறும் இருப்பத்தி எட்டுநாள் நடக்கும் மகத்துவத் திருவிழா
காண்கின்ற இடமெல்லாம் ஆன்றோர், சான்றோர் நிறைந்திருப்பார்கள்
ஆண்டவன் அருளோடு பங்குபெறுபவர் சமயக்கணக்கர்கள் மற்றும்
காலக்கணக்கர், தேவர்கள், பன்னாட்டு வணிகர்கள், படை த்தளபதிகள்

3. விழாவின் சிறப்பு :

புகாரின் சிறப்பு நாளங்காடி,வணிகர், மக்களைக் காக்கும் சதுக்கப் பூதம்
தகாது செய்யும் பாவியர் யாராயினும் அவரை அறைந்து தின்றுவிடும் பூதம்.
ஆக, மக்களின் நேர்மையும் நியாயமும் அவரவர் பயமே காரணம் ஆனாலும்
விகாரமாகி விடாமல் பூம்புகார் மேம்பட விழா எடுத்தல் அவசியம் , என்றார்

வானம் மும்மாரி பொழிக, கோள்கள் நிலைபிறழாமல் பயிர் வளம் செழிக்க
தானமும் தருமமும் மேவிட அரசன் செங்கோல் செலுத்துவானாக, வாழ்த்த
வானவரும் தேவர்களும் விழா காலங்களில் நகரில் தங்கி சிறப்பிப்பார்கள்
வானமே அதிர ஊர் மக்கள் கேட்கும்படி வள்ளுவன் முரசு அறைந்தனன்



4. முரசு அறைவோன் மக்களுக்கு கூறியது

தோரணங்களை வீதிகள் கோயில் வாயில்கள் கட்டித் தொங்க விடுங்கள்
பூரணகும்பங்கள், பாவை விளக்குகள், மங்கள பொருள்கள் பரப்புவீர்களாக
வாரணங்கள் துந்துபிகள் மங்கலவாத்தியங்கள் நகரெங்கும் முழங்கட்டும்
காரணத்தோடு குழுமும் மக்களுக்கு எல்லா பாதுகாப்பும் கொடுங்கள்

திண்ணைத் தூண்களில் பவளம் முத்து மாலைகள் அலங்கரிக்கட்டும்
மண் மேடுகளை சமமாக்கி பழமணல் மாற்றி புது மணல் பரப்புங்கள்
வண்ணப்பூ மாலை தொடுத்து மாட வீதிகளில்சேர்த்து கட்டி விடுங்கள்
விண்ணில் உள்ள தேவரகள் மனம் மகிழ்ச்சி பொங்க கொண்டாடுங்கள்

5. கோயில் வழிபாடுகள்

நெற்றிக் கண் சிவன் ஆலயம் முதல் சதுக்கத் தெய்வம் கோயில் எல்லாம்
முற்றிலும் வேறுபாடுகள் களைந்து ஒன்றே தெய்வம் என்று வழிபடுங்கள்
பற்றுதல் இல்லாத உறு பொருள் வாதிகள் எம்மதமும் ச்ம்மதம் என்றாகுக
செற்றமும் கலாமும் பகை, பூசல் செய்யாது பட்டிமன்றங்கள திகழட்டும்
(செற்றம்: சினம், கலாம் : போர்)

திருத்தி அமைக்கப்பட்ட விடுதிகள் வசதிகள் அனைவருக்கும் ஒன்று தான்
அருமை பெருமைகளை பேசி தேவரும் மக்களும் ஒன்றாக கூடுங்கள்
விருப்பமுடன் கொண்டாடுங்கள் இது உங்கள் ஊர் உங்கள் அருமை விழா
இருபத்தி எட்டு நாடகள் நடக்கும் இவ்விழா உலகின் தனிப்பெரும் விழா!


...தொடரும்



கவிஞர் ந.திருக்காமு

# நட்பு

எங்கே பிறந்தாலும்
எப்படியோ இருந்தாலும்
உணர்வுக்குள் உணர்வாய்
ஒன்று சேர தருவது தான்.
உயிர் நட்பு.



கவிஞர் ஸ்ரீவள்ளி கோவை

# ஆழம்

எதிலும்
மூழ்கி விடாதீர்கள்
ஆழமாக
ஒருவேளை
மீண்டும்
கரையேற முடியாமலே
போகலாம்.



கவிஞர் கீர்த்தனா ப
உதவிப் பேராசிரியர்

# உங்கள் கையில்

சந்தோஷத்தை சந்தடிகளில் உணர்ந்திடுங்கள்
சலிப்பை சல்லி சல்லியாக்குங்கள்
சிரிப்புகளை சிதறவிடுங்கள்
சீரான மனோபாவம் கொண்டிருங்கள்
சுத்த நல்லவனாகவும்,கெட்டவனாகவும் யாருமில்லை
சூத்திரத்தை எந்த விஷயத்திலும் ஆராயாதீர்
தட்டிக் கொடுத்துக்கொண்டே
உங்களை நீங்களே ஊக்கப்படுத்துங்கள்
சேமிப்பு கணக்கில்
அனுபவங்களை சேமித்து வையுங்கள்
சொந்தமெதுவும் நிரந்தரமில்லை
சோதனைகளை சேதப்படுத்திவிடுங்கள்
சௌகர்ய வாழ்வும் உங்கள் கையில்.



கவிஞர் நீலாசுபாஷ்
ஆக்கம்

# நடராசன் சிவகாமி

கணையாழி கொண்ட
   கள்வனின் மனதையோ
வீணை ஏந்தியவாறு
   விரைந்தே கவர்ந்து
துணையாக மாற்றும்
   துன்பமில்லா உன்னையே
இணையாக்க நினைத்தேனே
   இன்னொரு பிறவியிலுமே

பூக்களாய் மணக்கும்
   பூங்கோதையின் கதையினை
பாக்களாய் கோர்த்து
   பாரெங்கும் ஓவியமாக்கி
ஆக்கமான உழைப்போடு
   அவளையும் நூலாக்கி
மக்கள் முன்னிலையில்
   மகிழ்வோடு உருவாக்கி



உலகத்தில் நாள்தோறும்
   உயிராக நேசித்து
கலகம் இல்லாத
   காதலில் திளைத்து
நலமே நல்கும்
   நடராசன் சிவகாமியாலே
குலமே போற்றுகின்ற
   குணவதியை ஆள்வேனே

கவிஞர் ப.வெங்கடரமணன் குளித்தலை

# உனக்கும் கேட்டுப்பாருங்கள்

ஆசை பெருங்கணக்கு அதில் நீ முதல் எனக்கு
பாசம் தந்தேன் நேசம் தொடுத்தாயே கண்ணே
கரையுது நேரம் மறையுது காலம்
வாராயோ வசந்தம் தாரயோ உறவே
நெஞ்சில் சுமக்கிறேன் அதனாலே நானும் தாயானேனே
அன்பே உன்னை காண வேண்டும் ஒரு நொடி
பேச பேச கரையுது வேசமோ
வார்த்தை இல்லா மௌனத்தில் நான் உடைகிறேன்
அன்பின் சகோதரா பேசாது கடத்தாதே நேரத்தை;
ஒற்றை நொடியேனும் பேசிடு
குறும்பில் வளரும் செடி நாங்கள்
ஒற்ற நருக்கினாலும் வளரும் புதரு நாங்கள்
நித்தம் போடும் சப்தம் இனிமையாகும் பொழுதுகள்
பேச்சுக்குள் தடைவிதிகிடையாது
எல்லை மீற நாம் நலவாக தோன்றினால் போதுமே
ஏக்கம் பொருத்தமமே
காலமுழுதும் தொடரனும் நம் நேசமே
அன்பே வசந்தமாய் வல்லோன் தந்த அருள் நீ எனக்கு
இறைவனே துணை நமக்கு
வேண்டுமே அருளொன்று உன்னை சந்திக்க வேண்டுமே
தங்க தாரகையே உன்னை நான் ஆராதிக்க வேண்டும்
நலவாகிடுமே ஓர் நாள் காத்திருப்போ நான்



கவிஞர் சஃனால் பேகம் பத்தளம்(இலங்கை)

# மீண்டும் மீண்டும்



அன்றொரு நாள்!
நின் விழிகள் உடன்றன
மதவேழமாய் காட்சி பகராய்
தூறு நுழைவேனோ!

முழை நுழைவேனோ!
வழிவராய் விழி பார்க்காது நகர
மண்டுதலாய் மனதில் கலந்து
அச்சம் நீக்கியவனே!

இனி மறலி கண்டினும்
நீ அருகிருக்க அஞ்சும் வனிதை
யான் இலனடா.

நீ சினத்ததென் நலனுக்காய்
நானுணர நீரே
வையமானதென்ன மாயமோ.

மதிமயங்கிய அத்தருணம்
தடுமாறினேனல்லவா உன்னிடத்தில்.
ஓட ஓட விரட்டிடவுமில்லை.
ஓயாது மெய் உரசிடவுமில்லை.

தொலைந்தோம் தொலைதூரத்தின்
நிலவொளிதனில் நான் கதைக்க
நீவிர் வந்த கனாக்களை
என்னென்றுரைக்க இளவரசே.

நெறுடும் நெஞ்சில்
நிமிடத்திற்கு நிமிடம்
நிலை குழைந்தேன்
உறவினராளே.
நெகிழ்ச்சியால் திழைத்து
தித்திப்பாய் துளிர்கிறேன்

கண்ணா நின் காதலால்
கடிந்த சொல்லால் நின் அன்பு
வெளிக்கொணறவே.
நிற்கா விழிநீரும் சினத்திட
மறுத்து மீண்டும் நுழைகிறேனடா
நின் அகத்தோடே.

கவிஞர் ச.கார்த்திகா பழநி

# கான கருங்குயில்

ஊமையின் ராகம் போன்று
காற்றில் கலக்காமல்

பாடியவர் காதுக்குள்ளே
நுழைந்து சுழலாமல்

கீதத்தின் கானம்
இரைச்சலாகும் முன்



எங்கே போவது
போகுமிடம் தெரியாது
ஆனால் போக வேண்டும்

ஓரிதழ் புல்லின் வெடித்த பூ
போன்று காற்றில் கலந்து
தூரமாய் பயணிக்க வேண்டும்

பகலிரவு புரியாத வெளியில்
பணங் காசு செல்லாத ஊரில்

பார்வையில் படாத திசையில்
வருந்திக் கேட்கும் இசையில்

வலசைத் தூதாகும் பறவையின் சிறகில்
வாழ்ந்துவிட்டு வரும் வரம்தேடி
தூரமாய் பயணிக்க வேண்டும்

கவிஞர் ஜெயப்பிரபா
சென்னை 81

# காய்ச்ச வேண்டாம் கதிரவனே!

மயக்கும் ஒலிஎழுப்பும் மண்வாழ் உயிர்கள்
மரநிழலில் வாழுகின்ற மன்பதைக் கூட்டம்

கயவர்கள் களிப்பிற்காக மரங்கள் சாய,
காய்ச்சுகிறான் கதிரவனோ கடும் சீற்றத்தால்

முகத்திலே நீரூற்ற முனைந்திடும் போது
அகத்திலே ஆறாத தனலாய் எரிச்சல்

சிகைகூட தீப்பிடிக்கும் தெருவழி நடந்தால்,
சிதைமூட்டா பெருந்தனலில் துடிக்கும் உயிர்கள்

பணக்கைகள் அடக்கிடுமே பகலவன் கதிர்கள்
பெட்டிகளோ பலவும் குளிர்ஊற்றாய் மாறும்

உருவெல்லாம் எரிகிறதே வெய்யோன் உலவ
கருகிவிடும் பசும்புல்லும்காப்பவர் யாரே!



வெந்தனலும் சாம்பலுமே மீதியாய் நிற்கும்
சந்ததிகள் வாழ்வெப்படி சரியாய் யோசி!

கதிரவனே! கதிரவனே! காய்ச்சலை நிறுத்து!
பதி தீயில் பற்றிக்கொண்டால் நீயே பொறுப்பு

கவிஞர் இரா.இராஜாமணி ஈரோடு

# ஊடல்




கவிஞர் இரா.கோமதி
பொள்ளாச்சி

# தீராஞானம்

கண்களை மூடு
சப்தம் போடாதே
உலகத்தின் ஓசை வேண்டாம்
ஒதுங்கிக் கொள்
இப்போது கவனி
இழுத்து விடு உள்மூச்சு
மௌனத்தின் பரிபாஷை உணர்
முடிவிலி அமைதியைத் தேடு
தனிமையின் அகராதியைப் படி
தனியொரு உலகத்தில் சிறகடி
உன்னை நீயே நுகர்
உலகமென்பது தூசுக்கு நிகர்
தியானத்தின் திருவழி நட
தீராஞானத்தில் ஒளிருமுன் ஆன்மா!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில் ஏறாவூர்(இலங்கை)

# தடாகம்

தொண்டை நனைத்து
சிறகு உலர்த்த
பாத்திரம் ஏந்தி
பறக்கா பறவைகளின்
வலசை போதலை
பூர்த்தி செய்கின்றது
ஒரு
பொதுநல
தடாகம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன் ஈரோடு

# நான் யார்?

ஏட்டில் இருக்கும்
எழுத்துக்கள் அறியும்
எதுகை, மோனை தெரியாது.

பல நூறு கவிகள்
வடிக்க தோன்றும்
கவிநயம் தெரியாது.

மௌனத்தில் பல கவிகள்
செவியில் நுழைந்து சங்கீதம் பாடும்
சந்தநயம் எழுத தெரியாது.

கவிதை மழையில் நனைந்து
கற்பனையில் மிதக்க தோன்றும்
கவி மாலை தொடுக்க தெரியாது.



எண்ணங்களை ஒன்றாக்கி
சில கிறுக்கல்கள் பதிந்திடும்.
ஏற்கும் எழுகோலுக்கும்,
காகிதத்திற்கும் தெரியாது.

சிந்தையில் சிவனை வைத்து
தரிசிக்க தோன்றும்.
நிந்திக்க தெரியாது.

சிறகில்லா பறவையின் தஞ்சம்
மரக்கிளைக்கு தெரியாது.
தந்தி இல்லா வீணைக்கு
தன் இசை தெரியாது.

எனக்குள்ளே பல வினாக்கள் எழும்
தேடி பார்க்கிறேன்
நான் யார் என்று?

கவிஞர் குணசுந்தரி சிவா
காஞ்சிபுரம்

# மனஉண்டியலில் கூடும் நினைவுக்காசுகள்

முடி உதிர்ந்த தலைக்குன்றில்
துளிர்விடும் கோரை முடிகள்
வில்மீசையும் பிரெஞ்சு தாடியும்
அழிய அழிய
அந்தி பூசிய வானமாய் மாறும்
பிஞ்சு சூரியன் முகம்

பின்னோக்கி ஓடும் மரங்கள்
கொசுவச்சட்டையும் வன்துணியாடையும்
கால்சட்டையாய்க் குறையும் காலம்

ஆடிக்காற்றை முந்திச்செல்லும்
மூங்கில் உடம்பாய்
உருவெடுக்கும் பொழில்தோற்றம்

சோகமதிப்புகள் சரிந்து
ஏற்றம் காணும் இன்பப்பங்குச்சந்தை
மிதிவண்டியோடு உறவாடும்
அந்த நொடியில்



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்
துபாய்

# யானை

யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்.
ஐந்தறிவு மிருகங்களில்
யானையே முதலிடமாக வகிக்கிறது.
காட்டில் வாழும் இதன் சொரூபம்
மிக மிகப் பெரியது.
கோவில்களில் வளர்க்கப்படும்
யானைகள் தெய்வம்சம் மிகுந்தே காணப்படுகிறது.
யானையை சிறு அங்குசத்தால் அடக்கி விடலாம்.
ஸ்ரீ விநாயகர் பெருமானின் அம்சமாகவே கருதப்படுகிறது.
யானைப்பாகன் என்ன சொல்கிறானோ
அதன் படியே நடக்குமே.
யானைக்கு பழமொழிகள் பல உண்டு
'யானைக்கும்' அடி சறுக்கும்.
யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
பெண்களின் நடை அழகை
சின்ன யானைக்கும் ஒப்பிடுவார்களே!
மனிதனின் பலத்தை குறிக்கும் போது
யானையின் பலம் அதன் தும்பிக்கையிலே
மனிதனின் பலம் அவன் நம்பிக்கையிலே
என்றும் சொல்வது உண்டு.
அக்கால அரசர்கள் நான்கு வகை
படைகளில் யானை படைக்கே முதலிடமே.
அக்காலத்தில் பெரிய பெரிய தூண்களை
கோயிலில் நிறுவ யானைகளையே பயன்படுத்தினரே!
அக்காலத்தில் திடீரென அவசர காலமாக
ஒரு அரசரை நியமிக்க யானையின துதிக்கையில்
பூமாலை கொடுத்து அது யார் கழுத்தில் விழுகிறதோ
அவரே அரசன் ஆவார்.
யானையின் உருவ தத்துவமே ஒரு தனி அழகு.
யானையின் கண் சிறியதும்
கூர்மையான பார்வையும் உடையது.
அதன் காது மடல்கள் மிகப்பெரியது.
கூர்மையான நல்ல விஷயங்களை கேட்கவும்
எறும்பு பூச்சி போன்றவை
காதில் நுழையாது இருப்பதற்கு
காது மடலை அசைத்துக் கொண்டே இருக்குமே!
மதம் பிடித்த யானை கட்டுக்குள் அடங்காது.
மனிதனும் மதத்தை விடுத்து
எம்மதமும் சம்மதமாக வாழ்ந்தால்
வசந்தம் வாழ்வில் உண்டு.



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி ஊத்தங்கரை

# புன்னகை மலர்கள்

வாழ்வின் கோடைகளில்
வாழ்த்தும் பூக்களாய்

இருளின் ஓரத்தில்
சுகந்திக்கும் நாதங்களாய்

ஒவ்வொரு விடியலுமே
அழகாய் மலர்ந்திடட்டும்

வருகின்ற இன்னல்கள்
களைந்து ஒளிவீசிட

புன்னகை மலர்கள்
தினமுன் வதனமாகட்டும்

அடரிருள் மதிபோல்
முகமது அழகேது

அமாவாசை இரவினில்
வானவெளி வண்ணமில்லை

வாழ்வெனும் நிலத்தினில்
கோடையும் மாரியுமென

பருவங்கள் மாறியும்
பாரினில் வரலாம்

இரண்டையும் ஏற்றே
பொறுத்திடு உன் சோகம்

புன்னகை மலரே
பொன்னகை நிலவென

வாழ்வினில் யாவும்
நலவென எண்ணிடு



கவிஞர் செண்பகச் சோலையான்
ஆய்ஷ்.கம்பளை

# ஏச்சுப் பிழைப்பவன்

ஆசைகள் அதிகம் மனிதா மனிதா,
ஆசைக்கொள் அன்பினை ஏந்தி
அறிவினை தாங்கி
ஊக்கமென துவங்கி

உன்னிடம் கேட்க இல்லையென,
மறுத்து சேர்த்து வைத்த இருப்பும்
சில்லறையாய் சிதற பார்த்த - உன்
உடலும் பரிதவித்து குறுகி ஊனமது
குருதியை கொன்றிடும், ஞானம்
அது உன் புண்ணையும் வென்றிடும்.



பார்க்க தக்க தோற்று விட்டேன்,
மனிதா, மனிதம் இனியும் மாறுமா?
உந்தன் நிலையில்,
இவ்வனைத்தும் உணர்கிறேன் உன்னாலே.

கவிஞர் கனிதன் மா சரவணன் இலங்கை

# அரும்புகள்

குட்டிக் குட்டியாய்
கை கால் முளைத்த
ரோஜாக்கள்!
அவைகளில் தான்
எத்தனை நிறங்கள்!
அப்பாவின் கைவிரலை
விடாமல் அழும்
குட்டி தேவதைகள்!
அம்மாவின் கழுத்தைக்
கட்டிக்கொண்டு
இறங்க மறுத்து
முகம் திருப்பும்
அழகு தேவதைகள்!
ஆசிரியர் காலடியில்
சுற்றும் பட்டாம்பூச்சிகள்!
மிரண்டு பார்க்கும்
கருவண்டு விழிகள்!
ஓங்கி குரல் கொடுத்து
அழும் அழகுப் பதுமைகள்!
அழாதே என்று கண்
துடைக்கும் சமாதான
புறாக்கள்!
தன் பொருட்களை அணைத்துக்
கொண்டு அலையும்
அழகுப் பெட்டகங்கள்!
அடிச்சிட்டான் என்று குறைகூறும்
அழகுக் கிளிகள்!



தன் பாட்டுக்குத் தானே
ஆடும் மயில்கள்!
யாரோடும் சேராமல்
தனித்தே இருக்கும்
இளந்தளிர்கள்!
அழுதழுதுக் களைத்துக்
கவிழ்ந்து உறங்கும்
பூனைக் குட்டிகள்!
நர்சரி தோட்டத்துப்
வண்ண வண்ண பூக் குவியலாய்
அழகுமொட்டுக்கள்!
கல்மிஷம் கபடம்
இல்லாத குழந்தைகள்
கடவுளின் பரிசு!

கவிஞர் லதா சுப்ரமணியன் சென்னை 119

# ஆலய மணியின்மேல் உறங்கும் வண்ணத்துப்பூச்சி



வண்ணங்களைக் கண்டு
மனம்மகிழும் மனிதர்கள்
உந்தன் எண்ணங்களை
ஏன் உணரத்தவறினரோ?

மகரந்தச் சேர்க்கையினால்
மனிதகுலம் தழைக்க
எந்நாளும் உதவுகிறாய்!

உந்தன் உறைவிடமாம்
சோலைகள் அழிந்தனவோ?
சூழல் பாழ்பட்டதுவோ?

உயிர்க்கொல்லி மருந்துகளால்
உந்தன் இனம் அருகிடுதோ?
தன்னலம் மனிதர்களின்
தனிக்குணம் ஆகியதோ?

கோவிடம் முறையிட
கோவிலை அடைந்தாயோ
ஆராய்ச்சி மணியென
அதனை நினைத்தாயோ?
அசைக்க முடியாமல்
அதன்மீதே துயின்றாயோ?


உந்தன் மனக்குறையை
உள்ளுறையும் இறைவனிடம்
உரிய நேரத்தில் ஒலிமூலம்
உரைத்திடுமே கோயில்மணி!

கவிஞர் ஏ.சீ.சேஷாத்ரி

# மாலவனும் வைணவமும் பகுதி 23

## பெரியாழ்வார்(தொடர் 6)

ஏழாவது திருமொழியோ பூச்சூட அழைத்தலாகும்!
ஈரைந்தும் அமைந்திடுமே அறுசீரில் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தவகை! அடாணாவில் ரூபகந்தான்
ஆனந்தம் கூட்டிடுமே! எட்டாகத் தொடர்வதுவும்
பூச்சூட அழைப்பதுவே! பத்தமையும் அறுசீரில்
கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும்! தோடிபண்ணில்
ரூபகத்தில் பக்தியிசை மாலருளாம்! ஒன்பதிலே
பண்ணார்ந்த பதினொன்றும் நல்வெண்ணெய் களவான
பாலலீலை சாற்றுவதே! அத்துணையும் எண்சீரில்
கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாமே! கேதார
கௌளிபேரமை பண்மிடைந்த ஆதிதாளம் அருட்பொழிவே!
ஈற்றொன்றோ ஆய்ச்சியர்கள் யசோதையிடம் கண்ணனவன்
தீம்புகளை முறையிடலே! முன்னொன்பது கலித்தாழிசை!
ஈற்றமைவு தரவுகொச்சகக் கலிப்பாவே! நாதநாமக்
கிரியைப்பண் ரூபகந்தான் சொல்பொருட்சுவை மிக்கதுவே!
மூன்றாவது பத்தினிலே முதலமைவு கண்ணனவன்
தெய்வீகச் செயல்பலவும் கண்டுஉவகை அம்மம்கொள
அழைப்பதுவே! விதந்தோதல் பதினொன்றே! ஏழ்சீர்கொள்
கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும்! ஆரபிபண்
ஆதிதாளம் தாய்பாசம் நேருணர்த்தும் பாங்குரைக்கும்!
சேய்க்கண்ணன் கன்றுமேய்க்கச் செல்லலுண்ணி யசோதைதன்
உளத்துயரை அரற்றுவதாம்! இப்பத்தும் கலிநிலைத்தொடர்
அமைவாக இரண்டாவது திருமொழியாய் பெரியாழ்வார்
வட்டித்தார்! சங்கராபர ணராகத்தில் ரூபகந்தான்
ஏற்புடைத்தே! பெரியாழ்வார் மூன்றாவது பத்ததனில்
மூன்றான திருமொழியோ கண்ணனவன் வீட்டினுக்கு
திரும்பலிலே மகிழ்வுரைக்கும் ஈரைந்தும் யசோதைதன்
ஆனந்தம் கிளத்துகின்ற எழுசீர்கொள் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தமதை சுருட்டிராக ஆதிதாள
கூட்டிசையே! பெரியாழ்வார் பாவமிழ்தில் திளைப்போமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# அவள் தான் அறிந்தவுடன்

பல துன்பங்களுக்கு இடையே பிறந்தது புது மோதல்
பார்க்கும் பல பயிர்கள் எல்லாம்
விளைந்து விட்டதாக ஒரு தோற்றம்
ஆம் அப்படித்தான் அவளும் அவள் தோற்றமும்
அவள் பருவ வயது பாவனைகள்
என்னவென்று சொல்வது
அவள் தேடாத கண் விழிகள்
அவள் பேசாத ஊமை மொழிகள்
அவள் கேட்காத காதல் சுவடுகள்
அவள் பார்க்காத காதல் வண்ணம்
அவள் தொடராத என் கதைகள்
அவள் தொடரும் தின நிலைகள்
அவள் அருகில் இருந்தும் எங்கோற்பார்வை
யார் என்று அறியாமல்
தினமும் நான் ஒரு பார்வை
அவள்தான் என்று அறிந்தவுடன் நான் புரிந்த புதிர்
அவளுடன் அவள் நிலையை எதிர்பார்த்து
அவளை நினைக்கும் நொடிகள்
வாய் சுவடுகள் இல்லாமல்.



கவிஞர் ம.செல்லமுத்து நூத்தப்பூர்

# அலைகளின் ஓ(ஆ)சைகள்

நாடு பிடித்திட
நாட்டம்கொண்ட நாடுகள்
கரையை வெல்வதாய்
மோதும் அலைகள்
கடலின் உள்ளும் வெளியுமாய்
பயணிக்கும் கப்பல்கள்
அதனதன் போக்கிலே
கடலின் திமிங்கிலங்கள்
கரையின் வளையில் கடல் நண்டுகள்
வந்த பாதை மாற்றாது திரும்பும்
வலசைப் பறவைகள் - ஈன்ற குஞ்சுகள்
இத்தகைய மனநிலை
மனிதனுக்கும் வாய்க்குமா
கரையில் மோதும்
அலைகள்தான் ஓயுமா

கவிஞர் ரவிஜி

# புதியவை நாற்பது

## நூல் வாசிப்பு

வானவில் கவிதைத் தொகுப்பு 1
முதல் பதிப்பு பிப்ரவரி 2024
வெளியீடு வானவில் மின்னிதழ் மடத்துக்குளம்
பக்கம் 48; விலை ரூ 60
தொடர்புக்கு 6385328252




மடத்துக்குளம் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பாக வெளியிடப்படும் மாத மின்னிதழான வானவில் இதழில் வெளிவந்த கவிதைகளில் சிறப்பான கவிதைகள் நாற்பது தொகுக்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளது.

சமூக அவலங்களுக்கு எதிராக கோபம் கொப்பளிக்கும் கவிதைகளும் பெண் வலியைப் பேசும் பொருள் பொதிந்த கவிதைகளும் புதிய விடியலை நோக்கி நம்மை கைபிடித்து அழைத்துச் செல்லும் கவிதைகளும் நிறைந்துள்ள இந்நூல் முயற்சியைப் பாராட்டும் கவிஞர் மு.முருகேஷ் அவர்களின் அணிந்துரை நூலின் கருப்பொருளை அழகாக எடுத்தியம்புகிறது.

இனியவை நாற்பது இன்னா நாற்பது என்பன போன்று சங்க கால நூல்களைப் போல சிறப்புற வேண்டும் என்ற உயரிய நோக்கில் இதைத் தொகுப்பித்த ஆசிரியர்களின் கனவு கவிதைகளின் வழியே நிறைவேற வழிவகுக்கிறது.

கூண்டுச் சிறையிலிருந்து விட்டு விடுதலையாகி வானப்பரபபில் உயர் நடைபோடும் சுதந்திரக் கனவுகளைச் சுமந்துவரும் பெண்களின் எண்ணச் சிதறல்கள் அருமையாக நூலில் அரங்கேறியுள்ளன.

சமூகத்தில் நிலவும் பிற்போக்குத்தனம் அடிமைத்தனம் ஆணுக்குப் பெண் சமம் இல்லாத சமத்துவமின்மை இனங்களின் பெயரிலும் மொழியின் பெயரிலும் மனிதர்களுக்குள் நிகழும் மதக் கலவரங்கள் என பல தளங்களில் நின்று பேசும் கவிதைகள் நூலை அழகுறச் செய்கின்றன

இளையவன் சிவா நரசிங்காபரம்

## நூல் வாசிப்பு

குடும்பத் தலைவனுக்கு உடல் நலக்குறைவு என்றால் விடிய விடிய கூட இருந்து கவனிக்கும் அன்பான மனைவியின் கவனிப்போடு ஒப்பிடுகையில் அவளுக்கான உடல் நலக் குறைவை நாம் எப்படி அணுகுகிறோம் என்ற ஆண்களின் பார்வையில் எழுதப்பட்டிருக்கும் ஒரு வழிப்பாதை கவிதை ஒன்றே போதும் பெண்களின் மீதான ஆண்களின் பார்வையை எடுத்துச் சொல்ல.

தாய் மொழியின் மீதான பற்று எப்படி எல்லாம் கவிஞர்களுக்குள் கவிதைகளாக உருமாறி தமிழ் மீதும் மொழியின் மீதும் ஈடுபாட்டை விதைக்கிறது என்பதை பல கவிதைகள் நூலில் திறம்பட விளக்குகின்றன

அடிமைத்தனத்தை உடைத்து எறிந்து சுதந்திரமாகவும் சமூகத்தில் நல்லதொரு சிறப்பான பங்களிப்பை வழங்கவும் மனிதர்களுக்கு கைவரப் பெற்றிருக்கும் மிகச் சிறந்த ஆயுதம் கல்வி. கல்வியே ஒருவனை உலகமெங்கும் கொண்டு செல்லும் சிறந்த வாகனமாகவும் திகழ்கிறது. அவனுக்கு புகழைத் தரும் கிரீடமாகவும் விளங்குகிறது. அத்தகு கல்வி மனிதர்களுக்கு எவ்விதம் பயன் தரக்கூடியது என்பது தொடர்பான கவிதைகளும் நூலில் இடம் பெற்று நம்மையும் கல்வியின் மீதான நேசத்தை உணர வைக்கிறது

கவிஞர்களுக்கு இயல்பாகவே இயற்கையின் மீது பாசமும் நேசமும் பொங்கி வழியும். இயற்கையை பாதுகாத்தால் உலகமே சிறப்புற விளங்கும் உலகம் செழிப்படையும் போது உயிரினங்களும் ஆரோக்கியமான வளர்ச்சியில் உலகத்தை நிறைக்கும். அத்தகு உயர்ந்த நிலையை அடைய இயற்கையை நாம் காப்பாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஒவ்வொரு கவிதைகளும் கவிஞனுக்குள் முளைத்து கிடக்கும். அத்தகு கவிதைகளும் நூலில் இடம் பெற்று இன்றைய சூழலில் இயற்கையைக் காப்பதன் அவசியத்தை நமக்கு விரிவாக எடுத்துரைக்கின்றன.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அரசின் திட்டங்கள் முழுமையாக மக்களை சென்றடைய அரசு எவ்விதமான முயற்சிகளை மேற்கொண்டாலும் முழு பயனும் மக்களை சென்றடைவதில்லை அத்தகு நிலையில் மக்கள் மனுக்களின் அடிப்படையில் தங்களுக்கான தீர்வை நோக்கி நகர்கிறார்கள் ஆனால் எல்லா மனுக்களும் மக்களின் ஏக்கத்தை போக்குகின்றனவா என்பது குறித்தான கவிதை வெகு அருமை.

இளையவன் சிவா நரசிங்காபுரம்

## நூல் வாசிப்பு


பெண்களின் வழி நிறைந்த உலகத்திற்குள் ஆண்கள் நுழைந்தால் பெண்களைப் பற்றிய பிம்பம் என்னவாகும் என்பது குறித்து நான் கவிதைகளும் அரசின் செயல்பாடுகளை பற்றிய சாமானியனின் கவிதைகளும் நம்மை விழிப்புணர்வை நோக்கி நகர்த்துகின்றன

புதிய எண்ணங்களுடனும் புதிய புதிய கருத்துக்களுடனும் உலகத்தில் நிகழும் நிகழ்வுகளின் மீதான கவிஞர்களின் புதுப்புது பார்வைகளும் எழுத்தில் விரிந்து சிறகடித்துப் பறந்து கவிதை என மலர்ந்து வானவில்லில் இடம்பெற்றிருக்கும் ஒவ்வொன்றும் சிறப்பானதாக அமைந்து நூலை நல்லதொரு தளத்திற்கு எடுத்துச் சென்று வாசிப்பவரை யோசிக்க வைக்கிறது அதுவே இந்நூலைத் தொகுத்த ஆசிரியர்களின் முயற்சிக்கு கிடைத்த நற்பயன் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



# பம்மல் சம்பந்த முதலியார்

## கட்டுரை



பம்மல் சம்பந்த முதலியார், தாமே நாடகங்களை எழுதி, நடிக்கச் செய்து, சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்தவர். தமிழ் நாடக உலகம் "நாடகத் தந்தை" என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

பம்மல் சம்பந்த முதலியார் 01.2.1873ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் பம்மல் விஜயரங்க முதலியார் - மாணிக்க வேலு அம்மாள். பம்மல் என்பது இவரது ஊர்ப் பெயர்

இவர் தந்தை வேதரங்கம் முதலியார் தமிழ் ஆசிரியராக இருந்த காரணமாக வீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை,ஆர்வமுடன் படித்து வந்தார்.

கோவிந்தப்ப நாயக்கர் உயர்நிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் கல்வி பயின்றார். சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரான இவர் 1924 முதல் 1928 வரை நீதிமன்றத் தலைவராகவும் பணி செய்தார்.

தமிழ் நாடகப் போக்கில் இழிந்த நிலையைக் கண்டு நண்பர்கள் சிலருடன் சென்னை ஜார்ஜ் டவுனில், 1891 ஜூலை 1 ஆம் நாள், "சுகுண விலாச சபை" என்ற நாடகக் குழுவை உருவாக்கினார். லீலாவதி சுலோசனா - நாடகம் உரைநடையில் தமிழில் முதன் முதலாக அச்சிடப்பட்ட நாடகம் ஆகும். நாடகம் என்றால் தெருக்கூத்து என்ற நிலையை மாற்றி, நகரங்களிலே நல்ல மேடையமைத்து, பல வகை நாடகங்களை நடத்திக் காட்டினார்.

உயர்குடியில் பிறந்தவர்களையும், கற்றவர்களையும், அறிஞர்களையும், சம்பந்தம் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர். சி.பி.ராமஸ்வாமி அய்யர், எஸ்.சத்தியமூர்த்தி, எம்.கந்தசாமி முதலியார் (எம். கே. ராதாவின் தந்தை), சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், வி.வி.ஸ்ரீனிவாச அய்யங்கார், வி.சி.கோபாலரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அ வில்சன்
இதழாசிரியர்

# பம்மல் சம்பந்த முதலியார்

## கட்டுரை

நாடகக் கலைக்குத் தம் 81வது வயது வரை பெரும்பணி ஆற்றினார். கண்பார்வை மங்கிய நிலையிலும் தாம் சொல்லியே பிறரை எழுத வைத்தார். மொத்தம் 80 நாடகங்கள் எழுதினார்.

1959 இல் சங்கீத நாடக அகாதமி விருது, 1916 இல் நாடகப் பேராசிரியர் என்ற விருது, 1959 இல் பத்மபூஷண் என்ற பட்டத்தையும் பெற்றார்.
தன் நாடகங்களில் சிலவற்றில் செய்யுள், கீர்த்தனை முதலியவற்றையும் அறிமுகப்படுத்தினார். தமிழில் ஷேக்ஸ்பியர் ஆங்கில நாடங்கங்களை அவைகளின் சுவையோ நயமோ குறையாமல் தமிழ் நாடகங்களாக மொழிபெயர்த்தார்.

பம்மல் சம்பந்த முதலியாரின் பல நாடகங்கள் திரைப்படங்களாக்கப் பட்டுள்ளன.

1. காலவா ரிஷி (1932)
2. சதி சுலோச்சனா (1934, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
3. மனோகரா (1936, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
4. ரத்னாவளி (1935)
5. யயாதி (1938)
6. ராமலிங்க சுவாமிகள் (1939)
7. சந்திரஹரி (1941)
8. ஊர்வசி சாகசம் (1940)
9. தாசிப் பெண் (1943)
10. சபாபதி (1941)
11. வேதாள உலகம் (1948)




பம்மல் சம்பந்த முதலியார் இயற்றி, தமிழ் நாட்டரசு நாட்டுடைமையாக்கி யுள்ளனர் பட்டியல்.

- இந்தியனும்-ஹிட்லரும்
- இல்லறமும் துறவறமும்
- என் சுயசரிதை
- என் தந்தை தாயர்
- ஒன்பது குட்டி நாடகங்கள்
- ஓர் விருந்து (அ) சபாபதி நான்காம் பாகம்
- கலையோ-காதலோ? அல்லது நட்சத்திரங்களின் காதல்
- கள்வர் தலைவன்
- காதலர் கண்கள்
- காலக் குறிப்புகள்
- குறமகள், வைகுண்ட முதலியார் (இரு நாடகங்கள், 1934)
- சபாபதி
- சபாபதி முதலியாரும்-பேசும் படமும்
- நான் குற்றவாளி
- சாதாரண உணவுப் பொருள்களின் குணங்கள்
- தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (முதல் பாகம்)

அ வில்சன் இதழாசிரியர்

# பம்மல் சம்பந்த முதலியார்

கட்டுரை

|| தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (இரண்டாம் பாகம்)
|| தீபாவளி வரிசை || தீயின் சிறு திவலை
|| நாடகத் தமிழ் || நான் கண்ட நாடகக் கலைஞர்கள்
|| நீண்ட ஆயுளும் தேக ஆரோக்யமும்
|| பலவகை பூங்கொத்து || மனை ஆட்சி || மனோகரா
மூன்று நகைச்சுவை நாடகங்கள்
|| யயாதி || வாணீபுர வணிகன் || விடுதிப் புஷ்பங்கள்

92 ஆண்டுக் காலம் நிறை வாழ்வு வாழ்ந்த சம்பந்த முதலியார் 24.09.1964 ஆம் ஆண்டு மறைந்தார்.




அ வில்சன் இதழாசிரியர்

நாளை

# நமதே

தொட முடியாத உயரத்தில்
உன் கனவுகள் இருந்தாலும்,
தொட்டுவிடலாம் என்ற நம்பிக்கையில்
நீ போராடு.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com